## Copy of Deposition

சார்பு நீதிமன்றம், கொடுமுடி, ஈரோடு மாவட்டம்

அசல் வழக்கு எண்.15/2024

பெயர்:– முத்துசாமி நாள்:16.04.2026

பி.வா.சா.2 ஆஜர். சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

குறுக்கு விசாரணை :– (வாதி தரப்பில்)

எனது பெயர் முத்துசாமி என்றால் சரிதான். நான் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து சம்மன் எதுவும் வரவில்லை என்றால் சரிதான். 4ம் பிரதிவாதியான மகாதேவன் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். நான் என்ன படித்துள்ளேன் என்றால் SSLC படித்துள்ளேன். எனக்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால் தமிழ் எழுதப்படிக்க தெரியும். வாதி சிவானந்தம் இந்த வழக்கு எதற்காக தாக்கல்செய்துள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் சொத்து தனக்கும் வேண்டும் என்று தாக்கல் செய்துள்ளார். இந்த சொத்தானது ஆதியில் ஒரு கருப்பண கவுண்டர் கிரையம் வாங்கிய சொத்து என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ.1 ஆனது 02.02.1951ல் கருப்பண கவுண்டர் கிரையம் பெற்றது என்றால் சரிதான். கருப்பண கவுண்டர் கிரையம் பெற்ற சொத்தை வாதியின் தகப்பனார் பூசா கவுண்டர் மற்றும் சுப்பையன் ஆகியோர்கள் 24.08.1987ம் வருடம் பஞ்சாயத்து பாகப்பிரிவினை பத்திரம் எழுதிக்கொண்டார்கள் என்றால் சரிதான். மேற்படி பஞ்சாயத்து பாகப்பிரிவினை பத்திரத்தில் சுப்பையன் என்பவர் எனது தகப்பனார் என்றால் சரிதான். பஞ்சாயத்து பாகப்பிரிவினை பத்திரத்தில் A அட்டவணை சொத்து பூசா கவுண்டருக்கும், B அட்டவணை சொத்து எனது தகப்பனாருக்கும் பாத்தியப்பட்டது என்று எழுதப்பட்டிருந்தது என்றால் சரிதான். 1987ல் எழுதப்பட்ட பாகப்பிரிவினை பத்திரம் என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ.3 என்றால் சரிதான். வா.த.சா.ஆ.3ல் கருப்பண்ண கவுண்டர் மக்கள் பூசாகவுண்டர் 1 மற்றும் சுப்பையன் 2 நாம் இருவரும் மனப்பூர்வமாக சம்மதித்து எழுதிக்கொண்ட பஞ்சாயத்து பாக சாசன பத்திரம் என்னவென்றால் நமக்கு பிதுராஜித வகையில் அடியில் கண்ட சொத்து குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.த.சா.ஆ.3 ல் 2வதாக

## Copy of Deposition

கையொப்பம் செய்யப்பட்டுள்ளது எனது தகப்பனார் கையொப்பம் என்றால் சரிதான். **மேற்படி கையொப்பம் மட்டும் வா.த.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எனது தகப்பனாருக்கு பிரிந்த பாகப்பிரிவினை பத்திரப்படி B அட்டவணை சொத்தானது எனது தகப்பனார் இறந்ததற்கு பின்னிட்டு நானும் எனது வாரிசுதாரர்களும் ஒரு சண்முகம் என்பவருக்கு கிரையம் கொடுத்துவிட்டோம் என்றால் சரிதான். 2001ம் ஆண்டில் கிரையம் செய்து கொடுத்த சொத்தை வாதி சண்முகத்திடமிருந்து கிரையம் பெற்றுக்கொண்டார் என்றால் அது பற்றி தெரியாது. ஆவணங்களை படித்து பார்த்து என்னால் சொல்ல முடியுமா என்றால் படித்தால் தெரியும். என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ.5 ஆவணம் சண்முகம் வாதிக்கு எழுதிக்கொடுத்த ஆவணம் என்றால் சரிதான். பூசா கவுண்டர் இரயில்வே துறையில் வேலை செய்து வந்தார் என்றால் சரிதான். 1981ல் 4ம் பிரதிவாதியான மகாதேவன் இரயில்வே துறையில் தற்காலிகமாக வேலை செய்து வந்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வாதி சிவானந்தம் அவரது திருமணத்திற்கு முன்பு ஈரோடு நீல்கிரீஸ் பால் பண்ணையில் வேலை செய்து வந்தார் என்றால் அது பற்றி தெரியாது. 1987ல் மகாதேவனும் வாதி சிவானந்தமும் தனித்தனியாக பாகப்பிரிவினை பத்திரம் எழுதிக்கொண்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது பிரமாண வாக்குமூலத்தில் 2வது பத்தியில் 4வது வரியில் பூசா கவுண்டர் தனது சகோதரர் சுப்பையனிடம் பஞ்சாயத்து பாகப்பிரிவினை செய்து கொண்ட பின்னிட்டு தனது மகன்கள் சிவானந்தம், மகாதேவன் ஆகியோர்களுடன் பஞ்சாயத்து பாகப்பிரிவினை செய்யப்பட்டு 1987ம் வருடத்தில் இருந்து தனித்தனியாக ஒதுக்கப்பட்டு அவரவர்கள் அனுபவித்து வருகிறார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 1987ம் வருடத்தில் மேற்படி வாதியும், 4ம் பிரதிவாதியும் அவரவர்கள் சொத்தை பஞ்சாயத்து பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்று எனது பிரமாண பத்திரிக்கையிலும் ஆனால் நேரடியாக விசாரணையில் மேற்படி பாகப்பிரிவினை பத்திரம் பற்றி எனக்கு தெரியாது என்று முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தனித்தனியாகத்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். மகாதேவன் சுமார் ரூ.20,00,000/-ற்கு மேல் செலவு செய்து வீடு கட்டி வசிக்கிறார் என்று சொல்லியுள்ளேன் அதற்குண்டான ஆவணம் எதாவது

**Copy of Deposition**

நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வாதி சிவானந்தம் இரயில்வே துறையில் பணிக்கு சேர்ந்தது 1983ல் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதி, பிரதிவாதி குடும்ப உறவு முறை பற்றிய அனைத்து விவரங்களும் எனக்கு தெரியும் என்று சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. தற்போது சிவானந்தம் உடன் பேச்சு வார்த்தை இல்லை என்றால் சரியல்ல. அவ்வப்போது பேசுவேன். தற்போது அவர் பேசுவதில்லை. அவர் பேசினால் நான் பேசுவேன். சிவானந்தத்தின் முழு விவரம் தெரியாமல் மகாதேவன் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1987ல் எனது அப்பாவிற்கு பிரிந்த சொத்தை பூசா கவுண்டரும், சுப்பையனும் பாகபிரிவினை செய்ததில் சுப்பையன் சொத்தைதான் சண்முகத்திற்கு கிரையம் செய்து கொடுத்தார்கள் என்றால் சரிதான். சண்முகத்திடமிருந்து நான் கிரையம் வாங்கலாம் என்று நினைத்தேன், அதனை மீறி சிவானந்தம் வாங்கியதால் அவர் மீது உள்ள பகையினால் அவருக்கு எதிராக நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் பி.வா.த.சா.ஆ.3 ஆவணத்தை பொறுத்து எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. மகாதேவன் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்பதால் எனது சாட்சியத்தை நிராகரிக்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல. 1987ல் பூசா கவுண்டர், சுப்பையன் பிரித்துக்கொண்ட சொத்து பிதுராஜித வகையில் பிரித்துக்கொண்ட சொத்து என்றால் அது கிரையம் வாங்கிய சொத்து. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் பூசா கவுண்டருக்கு பூர்வீகமாக எந்த சொத்தும் இல்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அவருக்கு பூர்வீகமே மௌளசி கிராமம். இந்த ஊருக்கு வந்து கிரையம் பெற்ற சொத்து. மௌளசி கிராமத்திற்கும் தாவா சொத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் 3 கி.மீ. எனவே அந்த சொத்து பற்றி அவர்களுக்கு ஏற்கனவே தெரிந்திருக்கும் என்றால் திருமணத்திற்கு பிறகு இந்த ஊரில் வந்து வாங்கினார்கள். என்னுடைய பிரமாண பத்திரிக்கையில் உள்ள வாக்கியங்கள் ஒரு மாதிரியும், வாதியின் முன்னோர்கள் கிரையம் வாங்கிய சொத்திலும் பஞ்சாயத்து பாகப்பிரிவினை பத்திரத்தில் பிதுராஜித வகையில் பாத்தியப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது, தாங்கள் பிரதிவாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க நீதிமன்றத்தில் ஆஜராகி பொய்யாக சாட்சியம்

# Copy of Deposition

அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் மகாதேவன் கேட்டக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை:– இல்லை

| |
|---|
| Taken down by me in Open Court read over to the witness and acknowledge by |
| Interpreted<br>Him / Her To Be Correct<br>P SRIDEVI Digitally signed by P SRIDEVI Date: 2026.04.16 13:43:55 +0200<br>Subordinate Judge,<br>Kodumudi |